*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.101/2018***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW– 1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.மாசிலாமணி க/பெ. அழகேசன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 03.42 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தெடாவூர் புதூரில் உள்ள தெற்கு தெருவில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். நானும் கறி போடுவேன், எதிரிகளும் கறிபோடுவார்கள். அதனால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வருகிறது.

2) கடந்த 04.03.2017 அன்று எனது மகன் காலை சுமார் 10.00 மணியளவில் டீசல் பிடிக்க சென்றுவருவதாக கூறிச்சென்றார். எனது மகன் டீசல் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபொழுது, எதிரிகள் இருவரும் வாகனத்தில் வந்து எனது மகனின் மீது மோதுவதுபோல் ஓட்டிவந்ததாகவும், எனது மகன் ஒதுங்கிவந்துவிட்டதாகவும் என்னிடம் சொன்னார். நான், சரி விடுடா அதை பெருசா எடுத்துக்காத என்று எனது மகனிடம் அறிவுரை கூறினேன்.

3) அன்று இரவு 08.30 மணியளவில் எனது ஊரில் உள்ள பூங்கொடி என்பவரின் கடைக்கு, நான் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது எதிரிகள் மூவரும் அங்கு வந்து எங்கடி உன் மகன் என்று தகாத வார்த்தையால் கொச்சை கொச்சையாக பேசி, சபரி, எனது சீலையை பிடித்து இழுத்து அடித்துவிட்டார். தடுக்கவந்த எனது கணவரையும், சபரி அடித்துவிட்டார். என்ன நடந்தது என்று

தெரியவில்லை. மூவரும், என்னை அடித்து உதைத்தார்கள். எனக்கு இரண்டு, மூன்று இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. பின்பு என்னை, 108 ஆம்புலன்சு மூலம் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவந்து சேர்த்தார்கள்.

4) நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, கெங்கவல்லி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 03.51 A.N

ஒம்/–C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC.101/2018***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW- 2 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.அழகேசன் த/பெ. வையாபுரி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 03.52 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தெடாவூர் புதுாரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சி மாசிலாமணி, எனது மனைவி ஆவார். எதிரிகளை தெரியும், எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் ஆவார்கள். நாங்களும் கறி போடுவோம், எதிரிகளும் கறிபோடுவார்கள். அதனால் எங்களுக்குள் பிரச்சனை இருந்து வருகிறது.

2) கடந்த 04.03.2017 அன்று எனது மகன் காலை சுமார் 10.10 மணியளவில் டீசல் பிடிக்க சென்றுவருவதாக கூறிச்சென்றார். எனது மகன் டீசல் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வந்துகொண்டிருந்தபொழுது, எதிரிகள் இருவரும் வாகனத்தில் வந்து எனது மகனின் மீது மோதுவதுபோல் ஓட்டிவந்ததாகவும், எனது மகன் ஒதுங்கிவந்துவிட்டதாகவும் என்னிடம், எனது மனைவியிடமும் சொன்னார். நாங்கள், சரி விடுடா அதை பெருசா எடுத்துக்காத என்று எனது மகனிடம் அறிவுரை கூறினோம்.

3) அன்று இரவு 08.30 மணியளவில் எனது ஊரில் உள்ள பூங்கொடி என்பவரின் கடைக்கு சென்று, எனது மனைவி மளிகை பொருட்கள் வாங்கிக்கொண்டு வீட்டிற்கு வரும்பொழுது எதிரிகள் மூவரும் அங்கு வந்து எங்கடி உன் மகன் என்று தகாத வார்த்தையால் கொச்சை கொச்சையாக பேசி,

சபரி, எனது மனைவியின் துணியையும், சீலையையும் முகம் தெரியாத அளவிற்கு வளைத்துபிடித்துக்கொண்டு, அடித்தார்கள். எனது மனைவியின் சத்தம் கேட்டு, நான் விடுங்கடா விடுங்கடா என்று சொல்லிக்கொண்டு போகும்பொழுது சபரி, எனது அடி வயிற்றில் அவரது இரண்டு கைகளாலும் குத்தினார். எனக்கு வலி அதிகமாக இருந்ததால் மயக்கம் வந்துவிட்டது. பின்பு என்னையும், எனது மனைவியையும், எனது மகன் ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்துவந்து சேர்த்தார். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.01 A.N

ஒம்/−C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.

*Chapter XXII Code of Criminal Procedure.)*

*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.: **CC.101/2018***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court **PW-3 (LW-4)***

*Name / Father's Name: **திரு.சின்னதம்பி த/பெ. அய்யாசாமி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **25.04.2025.**

துவக்க நேரம் 04.02 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆணையம்பட்டி புதுாரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் மாசிலாமணி, அழகேசன் ஆகியோர்களை தெரியும், அவர்கள் தெடாவூரில் வசித்து வருகிறார்கள். எதிரிகளை தெரியும், எனது ஊர்க்காரர்கள்.

2) கடந்த 04.03.2017 அன்று இரவு 08.30 மணியளவில் நான் பூங்கொடியின் கடைக்கு சற்று தொலைவில் இயற்கை உபாதை கழிக்க சென்றேன். அங்கு சண்டையிடும் சத்தம் கேட்டு சென்று பார்த்தபொழுது, மாசிலாமணி, சபரியிடம் பேசிக்கொண்டிருந்தார். சபரியும், மாசிலாமணியை பேசி, அடித்தார். அப்பொழுது ரஞ்சித், பிரபு ஆகியோர்கள் அங்கு வந்து மாசிலாமணியை அடித்துவிட்டார்கள். நான் உடனே சண்டையை விலக்கிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.07 A.N

ஒம்/-C.உதயசுந்தரம்,
நீதித்துறை நடுவர் எண்.2,
ஆத்தூர்.